14th February 1958]

The Hon. Sri P. KAKKAN : (*a*) The Sathanur Reservoir Project benefits 15,300 acres in North Arcot district and 4,700 acres in South Arcot district.

(*b*) Yes.

(*c*) The matter was referred to the Chief Engineer (Irrigation). His report has been received and it is seen from the report that the Sathanur Reservoir Project has not interfered with the natural flows in the river. It is reported that the natural flows in the river are being let down scrupulously.

Sri A. GOVINDASAMY : சாத்தனூர் திட்டத்தினாலே பாதிக்கப் படவில்லையென்றும், மழை பெய்யாததினால் இந்த நிலைமை ஏற்பட்டது என்றும் மந்திரி அவர்கள் அறிவிக்கிறார்கள். மழையே பெய்யாதிருந்தால் சாத்தனூரில் எப்படி தண்ணீர் இருக்கமுடியும் ? எப்படி 3,000 ஏக்கராக்கள் சாகுபடி ஆனது என்றார் ?

The Hon. Sri P. KAKKAN : மழை அதிகமாகப் பெய்யும் காலத்திலே வீணாகப் போயிருக்கும் தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே போய்க்கொண்டிருக்கும் தண்ணீரைத் தடுத்து நிறுத்தவில்லை.

Sri K. ANBAZHAGAN : சாத்தனூர் அணைக்கட்டு கட்டுவதற்கு முன்னாலே எலிச்சத்திரம், திருக்கோயிலூர் அணைக்கட்டுகளிலே எவ்வளவு அடிகள் தண்ணீர் அங்கே தேங்குவதற்கு அனுமதித்திருந்தார்களோ—சாத்தனூர் அணைகட்டுவதற்கு முன்னாலே—அதே அளவுத் தண்ணீர் இப்பொழுதும் அனுமதிக்கப்படுகிறதா ?

The Hon. Sri P. KAKKAN: வடகிழக்குப் பருவ மழை சரியாக இல்லாததால் அந்த நிலைமை ஏற்பட்டது.

Mr. SPEAKER : I think this subject was discussed under Rule 40 two days ago.

Chief Minister's tour

* 107 *Q*.—Sri S. M. ANNAMALAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of mahazars and petitions given to him when he toured the North Arcot district in September 1957; and

(*b*) the action taken thereon?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Most of the mahazars and petitions presented to Chief Minister when he toured North Arcot in September 1957 were handed over by him in person to the Collector of North Arcot for taking action. It is not possible to state their numbers.

Sri S. M. ANNAMALAI : சுமார் ஐந்து மாதங்கள் ஆகியும்கூட, இவ்வளவு நாள் வரையிலும் ஒரு மனுகூட பரிசீலனை செய்யப்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : மனுக்கள் பரிசீலனை செய்யப் படவில்லை என்று எந்த அடிப்படையின் பேரில் கனம் அங்கத்தினர் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. கலெக்டர் அவர்கள் பரிசீலனை செய்திருப்பார் என்றுதான் நான் நம்புகிறேன்.